[19th January 1965

Temporary licences for touring cinemas

* 10 Q.—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is a proposal to extend the period of temporary licence from one year to two years for all touring cinemas?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

திரு. செ. சீனிவாசன் : பஞ்சாயத்துக்களுக்கும் சர்க்காருக்கும் நிரந்தரமான வரி கொடுக்கக்கூடியது என்ற காரணத்தினால் இந்தத் திட்டத்தை விஸ்தரித்து இரண்டு வருஷங்களுக்காவது லைசென்ஸ் கொடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதைப்பற்றி சவுத் இண்டியா ஃபிலிம் சேம்பர் ஆஃப் காமர்ஸின் ரெப்ரெஸெண்டேட்டிவ்ஸெல்லாம் வந்து அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்ட பிறகு வேண்டாம் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம்

* 11 கேள்வி—**திரு. சா. ராமசாமி :**
திரு. எம். எஸ். மணி : } கனம் ஸ்தல நிர்வாக
திரு. து. ப. அழகமுத்து :
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கப்படுவதை நிறுத்தி விடும்படி மாவட்ட கலெக்டர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கேள்வி நேரம் என்று தனியாக ஒதுக்கத் தேவையில்லை என்றும், உறுப்பினர் கேட்க விரும்பும் கேள்விகளை விவாதத்தின் போது எழுப்புவது நலம் என்று கலெக்டர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

திரு. சா. ராமசாமி : திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் இது போன்று கேள்விகள் கேட்கக்கூடாது என்று மாவட்ட ஆட்சியாளர் கூறியிருக்கிறார். மாவட்டத்தில் எழுகின்ற முக்கியமான பல பிரச்னைகளில் சம்பந்தப்பட்ட இலாக்காக்களிலிருந்து தகவல்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் முறையில், கேள்விகள் கேட்கக்கூடிய நிலைமையினைத் தடை செய்யாமல், கேள்விகள் கேட்பதை அனுமதிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கவுன்ஸில் முன்பு வரும் விஷயங்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவைகளைப் பற்றி தெளிவு பெறுவதற்குக் கேள்விகள் கேட்கலாம். அதற்கு பதிலளிப்பார்கள். ஆனால் தனியாக கேள்வி கேட்பதற்கு என்று ஒரு மணி நேரம்